# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2015

| தரம் : 11 | தமிழ்மொழியும் இலக்கியமும்<br>பெயர் / சுட்டெண் : ............................................................. | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி - III

**1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம் வினாக்களுக்கும் 5 ஆம், 6 ஆம், 7 ஆம் வினாக்களில் ஏதாவது ஒன்றுக்குமாக மொத்தம் 5 வினாக்களுக்கு விடை தருக.**

**01. சுருக்கமான விடை தருக.**

i) "மன்னனும் மாசறக்கற்றோனும் சீர் தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்"
அ) இவ்வாறு பாடியவர் யார்?
ஆ) இப்பாடலடிகளின் கருத்தை எழுதுக.

ii) "முத்தொள்ளாயிரம் என்பது ஒரு சிற்றிலக்கியவகை." இச் சிற்றிலக்கியத்திற்கு அப்பெயர் சூட்டப்பட்டதன் காரணம் என்ன?

iii) "எதிலாவது நான் சொன்ன பேச்சைக் கேட்டது உண்டா?" இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

iv) "நல்லமரமும் நச்சுமரமும்" என்ற கட்டுரையில் வள்ளுவர் கல்லாதவரின் செல்வத்துக்கு குறிப்பிடப்படும் உவமை ஒன்றை எடுத்துக்காட்டி சுருக்கமாக விளக்குக.

v) பொய்யான உறவுகளுக்கு 'வாக்குண்டாம்' பாடலில் குறிப்பிடப்படும் உவமை யாது?

vi) "பத்தும் பசிவந்திடப் பறந்துபோம்" என நல்வழி கூறுகின்றது. இங்கு குறிப்பிடப்படும் பத்தில் எவையேனும் நான்கினைக் குறிப்பிடுக.

vii) "ஆழிவாய்ச்சத்தம் அடங்காதோ..." என்ற பாடலில் தலைவி இரவு நீண்டமைக்காக கூறும் காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

viii) "ஆய்மணிப்பைம்பூண் அலங்குதார்க்கோதை..." என்ற பாடலில்
அ) கோதை என்பது யாரைக் குறிக்கும்?
ஆ) தார் என்பதன் கருத்து யாது?

ix) சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்... இக் குறட்பாவைக் கொண்டு கூட்டி எழுதுக.

x) "காலப்பெருநதியின் கால்நடையும் அப்படித்தான்" இங்கு கையாளப்பட்டிருக்கும் அணியை விளக்குக.

(10 x 2 = 20 புள்ளிகள்)



kalvi.lk

**02.** **பின்வரும் செய்யுட்பகுதிகள், உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றினதும் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.**

அ) மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் கன்றென்று
வீட்டளவும் பால்சொரியும் வெண்ணெயே - நாட்டில்
**அடையா நெடுங்கதவு மஞ்சலென்ற சொல்லும்**
**உடையான் சடையப்ப னூர்**

ஆ) **மல்லல் மறுகில் மடநா குடனாகச்**
**செல்லும் மழவிடை போற் செம்மாந்து** - மெல்லியாள்
பொன்மாலை பெற்றதோ ளோடும் புறப்பட்டான்
நன்மாலை வேலான் நளன்

இ) இருவரும் சென்றார்கள். ஒரு தனிப்பாறை வழியே செல்லுகிறார்கள். நிசப்தம், நிசப்தம், எங்கே பார்த்தாலும் நிசப்தம். மேகங்கள் சற்று விலகுகின்றன. சந்திரன் இலேசான மேகத்துக்குப் பின்னிருந்து மங்கின ஒளியைத் தருகின்றான். **ஆனால் பாதை ஒரு மரம் அடர்ந்த காட்டினில் புகுந்துவிட்டது.** மார்த்தாண்டனையும், மங்கையர்க்கரசியையும் இருள் மறுபடியும் விழுங்கி விட்டது.

ஈ) "கற்றறிவார் கண்டது அடக்கம் **அடங்காதார் பொச்சாந்துந் தம்மைப் புகழ்ந்துரைப்பார்'** என்றபடி நாம் சிறிதும் பெருமை பாராட்டாமலும் செருக்கு அடையாமலும் பணிந்த சொல்லும் பணிந்த செயலும் உடையவாய் எல்லா உயிர்களிடத்தும் அன்பும், இரக்கமும் காட்டி நாமும் பயன்பெற்றுப் பிற உயிர்களையும் பயன் பெறச் செய்து வருதலே நாம் பெற்ற அழியாச் செல்வமாகிய கல்வியைப் பயன்படுத்தும் முறையாகும்.

(20 புள்ளிகள்)

**03.** **'கல்வியே அழியாச் செல்வம்' என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்கி எழுதுக.**

அ) நமது அறிவை அறியாமை என்னும் இருள் மூடியிருப்பதற்கு குறிப்பிடப்படும் உவமைகள்.

ஆ) செல்வம் நிலையற்றது என்பதற்கு எடுத்துக் காட்டப்பட்ட இந்திய மண்ணில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தங்கள்.

இ) கல்லாமையின் இழிவு

**அல்லது**

"நல்லமரமும் நச்சுமரமும்" என்ற பாடத்தை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் விடயங்களை விளக்கி எழுதுக.

அ) படிப்பினைகள்

ஆ) கல்வியுடையானது செல்வத்தின் சமூகப்பயன்பாடு

இ) கல்வியிலான் செல்வத்தின் இழிவு

(15 புள்ளிகள்)



kalvi.lk

04. **நளவெண்பா சுயம்வரகாண்டத்தில் குறிப்பிடப்படும்**

அ) தமயந்தியின் அழகின் சிறப்பு

ஆ) நளனின் வீரம், பெருமை

இ) தமயந்தியின் மதிநுட்பம்

**அல்லது**

தனி ப்பாடல்களை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) "நிலவாய் விளங்குதலால்..." என்ற பாடலில் நிலவுக்கும் மலைக்கும் பொருந்தக்கூடிய சிலேடையணிக் கையாட்சி.

ஆ) "கல்லைத்தான்..." என்ற பாடலில் குறிப்பிடப்படும் புலவரின் வறுமை.

இ) "மஞ்சும் அஞ்சும்..." என்ற பாடலில் பெண்ணின் அழகு.

(15 புள்ளிகள்)

**5 ஆம், 6 ஆம், 7 ஆம் ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்க.**

05. 'மீன்பிடிகாரர்' என்ற நாட்டார் பாடலிலும் 'கடற்புறம்' என்ற கவிதையிலும் குறிப்பிடப்படும் மீனவர்களின் வாழ்க்கை முறையை விளக்கி எழுதுக. (10 புள்ளிகள்)

06. பார்வைகள் என்ற சிறுகதையூடாகக் குறிபிடப்படும் சமூகச் சிக்கல்களையும் படிப்பினைகளையும் எடுத்துக்காட்டி விளக்குக. (10 புள்ளிகள்)

07. முத்தொள்ளாயிரம் பாடலில் குறிப்பிடப்படும் மூவேந்தரது யானைப்படைகளின் சிறப்பை விளக்கி எழுதுக. (10 புள்ளிகள்)



kalvi.lk

kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page